# British Era Constructions in Batticaloa: A Study Based on Colonial Reports

*Nilanthini Chenthurran*[1]

nilanthinic@esn.ac.lk

**Abstract**

Instead of viewing history only as a collection of narratives, comprehend that the stone pillars and brick walls stand as silent witnesses, to transforming the past into evidence-based truths. In this context, the primary objective of this study is to document the constructions established during the British colonial period (1802–1948) in the Batticaloa district and their historical significance and to study the socio economic changes followed through these buildings, based on colonial-era reports. It indicates the local natural resources and the labour skills of the past. These architectural works serve as historical documents that explain the socio-economic transitions of that era. To ensure their administrative convenience and security in Sri Lanka, the British rulers constructed several buildings by adopting Neoclassical, Victorian, Gothic and Renaissance styles. These structures are characterized by unique features such as thick walls, arched doorways, high ceilings, and spacious verandas. These structures remain in use today with minor renovations, which affirm to their architectural durability. This research is conducted as a descriptive study using a historical approach. Primary data were collected and analyzed from British-era administrative reports and other archival documents. According to the findings, British-era constructions in Batticaloa can be categorized into various types, including rest houses, schools, places of worship, hospitals, lighthouses, courthouses, irrigation structures, and post offices. However most of the buildings in the rural areas have ruined nowdays without maintanace. This study documents the architectural heritage of Batticaloa and clarifies how the constructions of British-era, laid the foundation for the district's economic development and shifts in social structure. In a context where systematic documentation remains incomplete, the significance of this paper is, uncovering these historical traces through colonial reports.

***Keywords:*** *British Era, Batticaloa, Architecture, Economic Development, Social Changes.*

[1] *Senior Lecturer, Department of History, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.*

# மட்டக்களப்பில் பிரித்தானியர் கால கட்டுமானங்கள்- காலனித்துவ கால அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**ஆய்வுச் சுருக்கம்**

*பிரித்தானியர்கள் இலங்கையில் நிருவாக வசதிக்காகவும், பாதுகாப்பிற்காகவும் நியோகிளாசிக்கல்* (Neoclassical), *விக்டோரியன்* (Victorian), *கோதிக்* (Gothic) *மற்றும் மறுமலர்ச்சி* (Renaissance) *பாணிகளைத் தழுவிப் பல உறுதிமிக்க கட்டடங்களை அமைத்தனர். தடித்த சுவர்கள், வளைவு வாயில்கள், உயரமான கூரைகள் மற்றும் விசாலமான விறாந்தைகள் போன்ற தனித்துவமான பண்புகளைக் கொண்ட இக்கட்டுமானங்கள் இன்றும் சிற்சில புனரமைப்புக்களுடன் பயன்பாட்டில் உள்ளமையானது அவற்றின் கட்டடக்கலையின் உறுதித்தன்மைக்குச் சான்றாதாரங்களாகும். மட்டக்களப்பில் பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக் காலத்தில்(1802-1948) நிருவாக மற்றும் பொருளாதார மேம்பாடு கருதி நவீனத்துவமான மாற்றங்கள் ஏற்பட்டன. குறிப்பாக அவர்களது அபிவிருத்தி செயற்பாடுகளில் கிடைத்த இயற்கை வளங்களையும் சுதேசிகளின் உழைப்பினையும் பயன்படுத்தித் தேவையான கட்டுமானங்களை உருவாக்கிக் கொண்டனர். எனவே பிரித்தானியர்களால் உருவாக்கப்பட்ட கட்டுமானங்கள் மற்றும் அவற்றின் வரலாற்று முக்கியத்துவத்தை, காலனித்துவ கால அறிக்கைகளின் அடிப்படையில் ஆவணப்படுத்தலும் அவற்றோடு இணைந்த சமூக பொருளாதார மாற்றங்களை ஆராய்தலும் ஆய்வின் பிரதான நோக்கங்களாகும். கடந்த கால மனிதர்களின் வாழ்வியலையும் உழைப்பையும் பிரதிபலிக்கும் இக்கட்டடக்கலைகள், பிரித்தானிய காலனித்துவ காலப் பகுதியின் சமூக, பொருளாதார மாற்றங்களை விளக்கும் வரலாற்று ஆவணங்களாகும். இவ்வாய்வானது வரலாற்று அணுகுமுறையிலான விபரணவியல் ஆய்வாக அமைகின்றது. பிரித்தானியர் கால நிருவாக அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்களிலிருந்து முதனிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. ஆய்வின் பெறுபேறுகளின்படி, மட்டக்களப்பில் பிரித்தானியர் கால கட்டுமானங்களைத் தங்குமிட விடுதிகள், பாடசாலைகள், வழிபாட்டிடங்கள், மருத்துவமனைகள், கலங்கரை விளக்கம், நீதிமன்றங்கள், நீர்ப்பாசனக் கட்டமைப்புகள் மற்றும் தபால் அலுவலகங்கள் எனப் பலவாறாக வகைப்படுத்த முடிகின்றது. இருப்பினும் இவற்றில் பெரும்பாலான கட்டுமானங்கள் தற்போது முற்றாக அழிவடைந்துள்ளன. எனவே, மட்டக்களப்பின் கட்டடக்கலை பாரம்பரியத்தை ஆவணப்படுத்துவதுடன், பிரித்தானியர் காலக் கட்டுமானங்கள் எவ்வாறு இப்பிராந்தியத்தின் பொருளாதார மேம்பாட்டிற்கும் சமூகக் கட்டமைப்பு மாற்றத்திற்கும் வித்திட்டன என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. முறையான ஆவணப்படுத்தல் முழுமையடையாத நிலையில், காலனித்துவ கால அறிக்கைகளின் ஊடாக இந்த வரலாற்றுத் தடயங்களை வெளிக்கொணருவது இக்கட்டுரையின் முக்கியத்துவமாகும்.*

***திறவுச் சொற்கள்:*** *பிரித்தானியர் காலம், மட்டக்களப்பு, கட்டுமானங்கள், பொருளாதார மேம்பாடு, சமூக மாற்றங்கள்*

## *1. அறிமுகம்*

*கடந்தகால வரலாற்றினை ஆராய்வதில் கட்டுமானங்கள் பிரதான பங்கு வகிக்கின்றன. குறிப்பாக கட்டுமான அமைப்பு, அதில் இடம்பெறும் கலையம்சங்கள், கட்டுமானத்திற்குப் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு அவை எக்காலத்திற்குரிய கட்டுமானங்கள், யாரால் கட்டப்பட்டது, அது கட்டப்பட்டதன் நோக்கம், அதன் தனித்துவமான கலையம்சங்கள் என்பவற்றினை அறியமுடியும். அந்தவகையில் மட்டக்களப்புப் பிராந்தியத்தில் குறிப்பாக பிரித்தானிய காலனித்துவக் கட்டுமானங்கள் பற்றிய ஆய்வாக இக்கட்டுரை அமைகின்றது.*

*ஜவஹர்லால் நேரு, தனது மகளுக்கு எழுதிய கடிதங்களின் தொகுப்பான* 'Glimpses of World History' *என்ற நூலில், பழைய கோட்டைகள் மற்றும் சிதைவடைந்த கட்டடங்களைப் பற்றி எழுதும்போது, 'பழைய கட்டடங்கள் என்பவை வெறும் கற்கள் அல்ல, அவை கடந்த கால மனிதர்களின் கனவுகளையும், உழைப்பையும் நமக்குப் பேசும் மௌன மொழிகள்' என்ற கருத்தைப் பதிவு செய்துள்ளார். இதனை* 'These monuments are not mere piles of stones; they are the records of the dreams and aspirations of the people of those times.' *எனவே வரலாற்றை வெறும் கதைகளாகப் பார்க்காமல், ஆதாரபூர்வமான உண்மைகளாக மாற்றுவதில் இந்த 'கற்தூண்களும் செங்கற் சுவர்களும்' மௌனமான சாட்சிகளாக அமைகின்றன.*

*இலங்கையை ஆட்சி செய்த பிரித்தானியர்கள், நியோகிளாசிக்கல்* (Neoclassical), *விக்டோரியன்* (Victorian), *கோதிக்* (Gothic) *மற்றும் மறுமலர்ச்சி பாணிகளில்*(Renaissance) *பல உறுதியான கட்டடங்களை அமைத்தனர். இக்கால கட்டுமானங்களில் பாதுகாப்பரண்கள், கோட்டைகள், நிருவாகக் கட்டடங்கள், மணிக்கூட்டு கோபுரம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.* (Raheem & Colin-Thome, 2000)

*நியோகிளாசிக்கல் என்பது பண்டைய கிரேக்கம் மற்றும் உரோமானியக் கட்டக்கலையை அடிப்படையாகக் கொண்டது. விக்டோரியன் என்பது விக்டோரியா மகாராணியின் ஆட்சிக் காலத்தில் (19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி) புகழ்பெற்றது. இது பல பாணிகளின் கலவையாகவும், அலங்காரங்கள் நிறைந்ததாகவும் காணப்பட்டது. மறுமலர்ச்சிப் பாணியானது இத்தாலிய மறுமலர்ச்சிக் காலக் கட்டக்கலையைத் தழுவியது. இது எளிமையும் நுட்பமான விகிதாசாரமும் கொண்டது.*

*பொதுவாகப் பிரித்தானியர் காலக் கட்டுமானங்கள் தடித்த சுவர்கள், வளைவு வாயில்கள், உயரமான கூரைகள் மற்றும் விசாலமான விறாந்தாக்களைக் கொண்டதாக அமைக்கப்பட்டிருந்தன. அதன் உறுதித் தன்மையால் பிரித்தானியர் காலத்தில் அமைக்கப்பட்ட பல நிருவாகக் கட்டடங்கள்*

*இன்றுவரை சிறு சிறு புனரமைப்புக்களுடன் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அவை நாட்டின் கலாச்சார மற்றும் வரலாற்று பாரம்பரியத்தின் அங்கமாகத் திகழ்கின்றன.*

### *2.* நோக்கம்

*மட்டக்களப்பில் ஐரோப்பிய காலனித்துவம் நீண்ட வரலாற்றினைக் கொண்டிருந்தாலும்(1597-1948) பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் கட்டுமான அபிவிருத்திகள் அவர்களது இலகுவான நிருவாகக் கட்டமைப்பிற்காகப் பரவலாக ஏற்படுத்தப்பட்டன. இருப்பினும் அவை தொடர்பான ஆய்வுகளோ ஆவணப்படுத்தலோ முழுமையடையாத நிலையில் அதனை காலனித்துவ கால அறிக்கைகளினூடாக ஆவணப்படுத்தலும் அவற்றோடு இணைந்த சமூக பொருளாதார மாற்றங்களை ஆராய்தலும் ஆய்வின் பிரதான நோக்கங்களாகும்.*

### *3.* *இலக்கிய மீளாய்வு:*

*மட்டக்களப்பில் பிரித்தானியர் காலம் குறித்து உதிரியான ஆய்வுகளே இடம்பெற்றுள்ளன. இருப்பினும் அவற்றில் பிரித்தானியர் காலக் கட்டுமானங்கள் குறித்த பதிவுகள் இடம்பெறவில்லை. குறிப்பாக கோபாலசிங்கம்.சீ எழுதிய மட்டக்களப்பு வரலாறு ஒரு அறிமுகம்(2011), மட்டக்களப்புத் தேசம்: வரலாறும் வழக்காறும்(2016) போன்ற நூல்களில் காலனித்துவ கால நிருவாக மாற்றங்கள் குறித்து ஆராய்ந்துள்ளார்.*

Canagaratnam S.O (1921*) என்பவரால் எழுதப்பட்ட* ‘The Monograph of the Batticaloa District of the Eastern Province of Ceylon’ *என்ற நூலில் மட்டக்களப்பில் பிரித்தானியர் கால நீர்ப்பாசனத்துறை தொடர்பான கட்டுமானங்கள் குறித்து விபரிக்கப்பட்டுள்ளன.*

Woodeson.A. (1930) *என்பவரால் எழுதப்பட்ட* ‘Mantivu Leper Asylum -Batticaloa’ *என்ற நூலில் மாந்தீவில் கட்டப்பட்ட வைத்தியசாலைக் கட்டுமானங்கள் தொடர்பாக விபரித்துள்ளார். இந்நிலையில் பிரித்தானியர் காலத்தில் கட்டப்பட்ட கட்டுமானங்கள் சில இன்றுவரை அதன் உறுதித் தன்மையையும் வரலாற்று முக்கியத்துவத்தையும் பறைசாற்றி நின்றாலும் அவை தொடர்பான முழுமையான ஆய்வுகள் இதுவரை இடம்பெறாமை ஆய்வு இடைவெளியைத் தோற்றுவித்துள்ளது.*

### *4.* *ஆய்வு வினா:*

*மட்டக்களப்பில் பிரித்தானியர்களி;ன் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்ட கட்டுமானங்கள் எவை? அவை கட்டப்பட்டதன் பிரதான நோக்கம் என்ன? அதனால் ஏற்பட்ட பொருளாதார, சமூக மாற்றங்கள் எவை? போன்றவை ஆய்வு வினாக்களாக அமைகின்றன.*

### *5.* *அணுகுமுறை*

*இவ்வாய்வானது வரலாற்று அணுகுமுறையில் விபரணவியல் ஆய்வாக அமைகின்றது. ஆய்விற்கான தரவுகள் பிரித்தானியர் கால ஆவணங்கள் மூலமாகத் தரவுகள் சேகரிக்கப்பட்டு*

*பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. கிழக்கு மாகாணம் குறித்த பிரித்தானியர் கால வரைபடங்கள், நிருவாக அறிக்கைகள், வருடாந்த ஆண்டு அறிக்கைகள், இலங்கை நீலப்புத்தகக் குறிப்புக்கள் போன்றவற்றில் இருந்து பெறப்பட்ட தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.*

### *6. ஆய்வு வரையறை:*

*இலங்கையில் பிரித்தானியரின் ஆட்சிக்காலம் 1796 இலிருந்து ஆரம்பித்தாலும் மட்டக்களப்பில் அவர்களது ஆட்சியானது 1802 இருந்தே நிலைபெறுகின்றது. எனவே ஆய்வுப் பிரதேசமாக மட்டக்களப்பு மாவட்டத்தையும் காலப்பதியாக 1802 தொடக்கம் 1948 வரையான காலப்பகுதியையும் கொண்டதாக ஆய்வு வரையறை அமைகின்றது.*

### *7. பெறுபேறுகளும் முடிவுகளும்*

*மட்டக்களப்பில் பிரித்தானியர் கால கட்டுமானங்களைக் காலனித்துவ அறிக்கைகளைக் கொண்டு ஆராய்கின்றபோது மேல்வருமாறு வகைப்படுத்தலாம். குறிப்பாக தங்குமிட விடுதிகளும் பங்களாக்களும், பாடசாலைகளும் தேவாலயங்களும், மருத்துவமனைகளும் டிஸ்பென்சரிகளும், வன வளப்பாதுகாப்பு அலுவலகம், கலங்கரை விளக்கம், நீதிமன்றக் கட்டுமானங்கள், நீர்ப்பாசனத்துறை, வீதிகள் மற்றும் மேம்பாலக் கட்டுமானங்கள், தபாற்சேவை, ஏனைய கட்டுமானங்கள் என வகைப்படுத்த முடியும்.*

### *7.1 தங்குமிட விடுதிகளும் பங்களாக்களும்*

*1926ஆம் ஆண்டு நிலவளவைத் திணைக்களம் கிழக்கு மாகாணத்தில் மேற்கொண்ட கணக்கெடுப்பில் மட்டக்களப்பில் பிரித்தானியர் காலத்தில் இயங்கிய தங்குமிட விடுதிகள் கல்குடா, செங்கலடி போன்ற இடங்களில் அமைக்கப்பட்டிருந்தன. அத்தோடு வட்டவான், செங்கலடி போன்ற இடங்களில் பி.டபிள்யூ குவாட்டஸ்கள் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது.*

*அதேபோன்று பிரித்தானியர் காலத்தில் அமைக்கப்பட்ட பங்களாக்களாக புன்னக்குடா பங்களா, மயிலம்பாவெளியில் அமைக்கப்பட்ட இரண்டு பங்களாக்கள், பாலமீன்மடு பங்களா, டி.ஜே.எஸ் பங்களா, லேடி மனிங் பங்களா, கடுக்காமுனையில் நீர்ப்பாசனத்துறைக்கான இரண்டு பங்களாக்கள், சடயந்தலாவை நீர்ப்பாசனத் துறைக்கான பங்களா, சம்மாந்துறை எ.ஆர்.சி பங்களா, கல்முனை பி.டபிள்யூ பங்களா, டி.இ.பங்களா, பெற்றோலியம் டிப்போ பங்களா, கல்முனை கோட்டில் இரண்டு பங்களாக்கள், கரடிக்குளம் கோட் பங்களா, காரைதீவு பங்களா, கொண்டவெட்டுவான் பங்களா போன்றவற்றைக் குறிப்பிடலாம்.*

*மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்பற்றுப் பிரிவில், மயிலம்பாவெளி மற்றும் ஏறாவூர் பகுதிகளில் தென்னந்தோப்புக்களும், பிரித்தானியர்கால பங்களாக்களும் இருந்தன. உள்நாட்டுப் போரின் போது, இரண்டு பிரித்தானிய பங்களாக்களும் அவற்றின் ஏழு குடியிருப்புத் தொகுதிகளும்* (Quarters) *முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. தற்போது அவற்றிற்கான எந்தவொரு தடயங்களும் இல்லை. (தகவல் வழங்கியவர்: உதயச்சந்திரன், தென்னை பயிர்ச்செய்கை சபை, மயிலம்பாவெளி). தென்னை நாரிலிருந்து கயிறு மற்றும் பாய்களை உற்பத்தி செய்யும் தும்புத்*

*தொழிற்சாலை இப்பிரிவில் ஒரு முக்கியமான வேலைவாய்ப்புத் துறையாக விளங்கியது. புன்னக்குடா பங்களாவிற்கு அருகாமையில் அமைந்திருந்த ஒரு தும்புத் தொழிற்சாலையில், ஏறாவூர் பற்று பிரிவைச் சேர்ந்த ஏராளமான பெண் தொழிலாளிகள் பணிபுரிந்துள்ளனர்.*

***7.2 பாடசாலைகளும் தேவாலயங்களும்:***

***பாடசாலைகள்:*** *பிரித்தானியர் காலத்தில் இயங்கிய பாடசாலைகளை ஆராய்கின்றபோது கோரளைப்பற்று, சந்திவெளி, கிரான், ஓட்டமாவடி, வாழைச்சேனை, முறக்கொட்டான்சேனை, வந்தாறுமூலை, களுவன்கேணி, கொம்மாதுறை, செங்கலடி, ஏறாவூர், ஆறுமுகத்தான் குடியிருப்பு, தன்னாமுனை, அமிர்தகழி, கொக்குவில், ஈச்சந்தீவு, நாவலடி, தாண்டவன்வெளி, கோட்டமுனை, அரசடி, புளியந்தீவு, பாலங்குளம், உப்போடை, மண்முனை, திமிலதீவு, கன்னங்குடா, முனைக்காடு, மஞ்சந்தொடுவாய் (2), காத்தான்குடி (2), ஆரப்பத்தை (2), புதுக்குடியிருப்பு, குருக்கள் மடம், கொக்கட்டிச்சோலை, முதலைக்குடா, துறைநீலாவணை, வீரமுனை, சம்மாந்துறை, சொறிக்கல்முனை, கரடிக்குளம், மருதமுனை, பாண்டிருப்பு, கல்முனை, கல்முனைக்குடி, சாய்ந்தமருது, கரவாகு, காரைதீவு, நிந்தவூர், கொண்டவெட்டுவான் போன்ற இடங்களில் பாடசாலைகள் இயங்கின.* (Map of the Villages in the Eastern Province, 1926).

*1916 ஆம் ஆண்டு ஆடிமாதம் 4ஆம் திகதி, எப்.ஹெய்ம்பேர்கர்* (F. Heimburger), *எல்.பொண்டுவேலுக்கு* (L. Bonduelle) *எழுதிய கடிதத்தின்படி, மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரியின் கட்டுமானப் பணிகள் ஏறத்தாழ மூன்றில் இரண்டு பங்கு நிறைவடைந்திருந்தன. 1916ஆம் ஆண்டு வரை இக்கல்லூரிக்காக 355,000 பிராங்குகள் செலவிடப்பட்டதாகக் கல்லூரிப் பொருளாளர் குறிப்பிட்டுள்ளார். ஐரோப்பாவில் மேலும் 200,000 பிராங்குகள் கையிருப்பில் இருந்துள்ளன. போர் முடிவுக்கு வரும்போது அந்த நிதி எஞ்சியிருந்ததால், 75,000 ரூபாய் (142,000 பிராங்குகள்) கடனை 4,000 ரூபாய் ஆண்டு வட்டியுடன் திருப்பிச் செலுத்த வேண்டியிருந்தது. இது கல்லூரியின் எஞ்சிய பணிகளை முடிக்க மிகக் குறைந்த நிதியையே மிச்சப்படுத்தியது. அக்காலப்பகுதியில் கல்லூரியின் ஆண்டு வரவு செலவுத் திட்டம் 20,000 ரூபாயாக இருந்தபோதிலும், அதன் வருமானம் 8,888 ரூபாயைத் தாண்டவில்லை* (Perniola, 2006: 419). *பிரித்தானிய காலனித்துவ காலத்தில் பாடசாலைகள் ஊடாக, நவீன சமூகம் உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.*

***தேவாலயங்கள்:*** *மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மெதடிஸ்த திருச்சபைகளில் முதன்மையானது, நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள புளியந்தீவு மெதடிஸ்த தேவாலயம் ஆகும். இது 1838ஆம் ஆண்டு கட்டப்பட்டது. 1814ஆம் ஆண்டு மட்டக்களப்பிற்கு முதல் மெதடிஸ்த மிஷனரி வருகை தந்ததிலிருந்து, சிறிய அளவிலான மெதடிஸ்த சபைகள் அங்கு இயங்கி வந்தன.*

*கட்டடக்கலை அமைப்பானது பெரும்பாலான தேவாலயங்களைப் போலவே இதுவும் சிலுவை வடிவில்* (Cross shape) *அமைக்கப்பட்டுள்ளது. இதன் பிரதான மண்டபம் சிலுவையின் மையப் பகுதியாகவும், அதன் நுனியில் அமைந்துள்ள வளைவு வடிவ பலிபீடம்* (Altar) *சிலுவையின் தலைப் பகுதியாகவும் கருதப்படுகிறது. இருபுறமும் உள்ள இறக்கைகள்* (Wings) *சிலுவையின் கைகளைக் குறிக்கின்றன. உட்புற அமைப்பானது பிரதான மண்டபம் உயர்ந்த கூரையையும், இருபுறமும் தலா மூன்று வலிமையான, உருண்டையான, அகலமான தூண்களையும் கொண்டுள்ளது.*

*இந்த தேவாலயம் வணக்கத்திற்குரிய ரால்ப் ஸ்காட்* (Rev.Ralph Stott) *என்பவரின் வழிகாட்டலில் வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்டுள்ளது. இவர் மட்டக்களப்பில் மெதடிஸ்த சமயம் வளர முக்கிய பங்காற்றியவர். பிற்காலத்தில் 25 ஸ்ரேலிங் பவுன் செலவில் தேவாலயத்தின் இருபுறமும் இரண்டு வராண்டாக்கள்* (Verandahs) *சேர்க்கப்பட்டன. காலப்போக்கில் மெதடிஸ்த விசுவாசிகளின் எண்ணிக்கை அதிகரித்ததால், இப்பிராந்தியத்தின் ஏனைய முக்கிய நகரங்களிலும் தேவாலயங்கள் கட்டப்பட்டன. குறிப்பாக கல்முனை, கல்லாறு மற்றும் கோட்டைமுனையில் பெரிய தேவாலயங்களும் செங்கலடி, முதலைக்குடா மற்றும் வாழைச்சேனை போன்ற கிராமப்புறப் பகுதிகளில் சிறிய தேவாலயங்களும் வழிபாட்டுக்காக அமைக்கப்பட்டன.*

*மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்ட கத்தோலிக்க தேவாலயங்கள், ஒல்லாந்தர் காலத்து சமய ஒடுக்குமுறையிலிருந்து விடுபட்டு கத்தோலிக்க சமயம் மீண்டும் மலர்ந்தமைக்கான வரலாற்றுச் சான்றுகளாகத் திகழ்கின்றன. குறிப்பாக, புளியந்தீவு புனித மரியன்னை பேராலயம் 1808இல் பாஸ்கல் முதலியாரால் ஆரம்பிக்கப்பட்டு, பிரித்தானிய நிருவாகத்தின் கீழ் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்ட ஒரு முக்கிய கட்டுமானமாகும். இதன் ஆரம்பகால கட்டடம் இன்றும் அதன் ஒரு பகுதியாகப் பேணப்படுவது அதன் வரலாற்றுத் தொடர்ச்சியை உறுதிப்படுத்துகின்றது. அதேபோல், தாண்டவன்வெளி காணிக்கை மாதா பேராலயம் 1907ஆம் ஆண்டு சூறாவளிக்குப் பிந்தைய புனரமைப்பு மற்றும் 1918இல் புதிய பங்காகத் தரம் உயர்த்தப்பட்டதன் மூலம், இயேசு சபையினரின் கட்டடக்கலைத் தாக்கத்தைப் பிரதிபலிக்கிறது. இக்காலப்பகுதியில் எழுந்த புனித அந்தோனியார் திருத்தலம் போன்ற வழிபாட்டிடங்கள், பிரித்தானியரின் மதச் சுதந்திரக் கொள்கையினால் கத்தோலிக்க மக்கள் சமூக மற்றும் பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்துள்ளமையைக் காட்டுகின்றது. இதற்கு ஆரம்ப காலத்தில் அமைக்கப்பட்ட கொட்டில்கள், கல் மற்றும் செங்கற்களாலான நிலையான வழிபாட்டுத் தலங்களை எழுப்பியதற்கான அழியாத அடையாளங்களாக இன்றும் கம்பீரமாக நிற்கின்றன.*

*1922ஆம் ஆண்டு இலங்கை நீலப்புத்தகத் தரவுகளின் அடிப்படையில் மட்டக்களப்பிலுள்ள உரோமன் கத்தோலிக்க தேவாலயங்களின் விபரங்கள் மேல்வருமாறு அமைகின்றது.* Our Lady of Dolors & St.Anthony’s, Batticaloa, St.Mary’s, & St.Sebastians's, Batticaloa, Hole Name’s,

Kalkudah & St.Mary's, Kallar, The Sacred Heart, Kalmunai, St. Francis Xavier's, Koraikallimadu, Our Lady of Lourdes, Navatkudah, Holy Rosary's, Periapullumalai and the Holy Cross, Sory-Kalmunai, St.Joseph's, Thannamuani and St.Joseph's Vaharai, St.Peter's and Paul's Vantarumoolai, St.Anna's Veechu-Kalmunai and St.James's Vellavely. (The Ceylon Blue Book, 1922).

*மேலும் மட்டக்களப்பிலுள்ள வெஸ்லியன் தேவாலயங்கள் கோமாரி, கல்முனை, களுவன்கேணி, கருங்கொடித்தீவு, கோட்டைமுனை, மஞ்சந்தொடுவாய், பெரிய கல்லாறு, செங்கலடி, திருக்கோவில் போன்ற இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.* (The Ceylon Blue Book, 1922).

***7.3 மருத்துவ மனைகளும் டிஸ்பென்சரிகளும்***

*1933ஆம் ஆண்டின் இலங்கை நிருவாக அறிக்கையின்படி, ஏறாவூர், காத்தான்குடி, பாண்டிருப்பு, அக்கரைப்பற்று மற்றும் பொத்துவில் ஆகிய இடங்களில் வெளிநோயாளர் மருந்தகங்கள் இயங்கி வந்தன. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான ஆலோசனைகளை வழங்க ஒரு பெண் மருத்துவரின் தலைமையில் மிஷன் ஒரு மருந்தகத்தை அமைத்தது. மேலும், மட்டக்களப்பு, கல்முனை மற்றும் மகாஓயா ஆகிய இடங்களில் மூன்று முக்கிய மருத்துவமனைகள் இருந்துள்ளன. இந்த மூன்று மருத்துவமனைகளையும் ஒரு மாகாண அறுவை சிகிச்சை நிபுணர்* (Provincial Surgeon) *கண்காணித்து வந்ததோடு, ஒவ்வொரு மருத்துவமனைக்கும் தகுதியான மருத்துவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர்.*(The Ceylon Administrative Report, 1933).

***கட்டுமான திருத்தப் பணிகள் மற்றும் செலவுகள்:*** *1878 மற்றும் 1892ஆம் ஆண்டுகளின் நிருவாக அறிக்கைகள், சமகால மருத்துவமனைகளின் பராமரிப்பு மற்றும் கட்டுமானச் செலவுகளைத் தெளிவாகக் காட்டுகின்றன. சில முக்கிய தரவுகள் மேல்வருமாறு அமைகின்றது.*

- *மட்டக்களப்பு மருத்துவமனையின் பெண்கள் விடுதிக்காக ரூ.3100 செலவிடப்பட்டது.*
- *மட்டக்களப்பு சிவில் மருத்துவமனையின் திருத்தப் பணிகளுக்கு ரூ.49 மற்றும் அதன் எல்லைச் சுவர் பழுதுபார்ப்புக்கு ரூ.120 ஒதுக்கப்பட்டது.*
- *மட்டக்களப்பில் பெரியம்மை*(Smallpox) *மருத்துவமனையின் அவசரத் திருத்தங்களுக்கு ரூ.145 செலவிடப்பட்டது.*
- *கல்முனை, கருங்கொடித்தீவு மற்றும் பொத்துவில் ஆகிய இடங்களில் மருத்துவமனை மற்றும் உத்தியோகத்தர் குடியிருப்புகளின் கூரை திருத்தங்களுக்கு ரூ.400 செலவிடப்பட்டது.*
- *1938ஆம் ஆண்டின் அறிக்கையின்படி, அக்கரைப்பற்று குடிசை மருத்துவமனையின்* (Cottage Hospital) *கட்டுமானத்திற்காக ரூ.25,000 செலவிடப்பட்டது.*

- *மருத்துவ கட்டுமான வசதிகளுக்கான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ரூ.9505 செலவிடப்பட்டுள்ளது.* (The Ceylon Administrative Report, 1938). *அத்தோடு அரசடி, ஆரப்பத்தை, கொக்கட்டிச்சோலை, செங்கலடி போன்ற இடங்களில் டிஸ்பென்சரிகள் அமைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது* (Map of the Villages in the Eastern Province, 1926).

***மாந்தீவு தொழுநோய் மருத்துவமனை:*** *மட்டக்களப்பு மாவட்டத்தின் மாந்தீவில் ஒரு தொழுநோய் மருத்துவமனை 1921 கார்த்திகை மாதம் பிரித்தானியர்களால் நிறுவப்பட்டது. தொடக்கத்தில் 150 நோயாளிகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த மருத்துவமனையின் ஆரம்பகாலச் சூழல் மிகவும் சவாலானதாக அமைந்திருந்தது. மட்டக்களப்பின் பிரம்மாண்டமான நீரேரியில் அமைந்துள்ள இந்த இடம், ஒரு காலத்தில் 'மரண தீவு' என்று அழைக்கப்பட்டுள்ளது. இதனைப் பராமரிக்க பிரான்சிஸ்கன் சகோதரிகள் (Franciscan Sisters) முன்வந்தனர். குறிப்பாக, மேரி டி செயின்ட் சேவியர் என்ற சகோதரி தாமும் அந்த நோயால் பாதிக்கப்பட்டிருந்த போதிலும், தமிழ் மொழியில் சரளமாகப் பேசும் திறன் கொண்டவராக அங்கு சிறிய குடில் ஒன்றில் தங்கி நோயாளிகளுக்குப் பெரும் ஊக்கமளித்து வந்துள்ளார்.*

***7.4 வனவளப் பாதுகாப்பு அலுவலகம்***

*இலங்கை நாட்காட்டியின்(1822) குறிப்புப்படி, சமகாலத்தில் மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் நல்ல தங்குமிட வசதிகளைக்(Rest house) கொண்டிருந்தது. மேலும், இப்பகுதி மிகவும் தரம் வாய்ந்த மரங்களைக் கொண்ட அடர்ந்த காடுகளால் சூழப்பட்டிருந்தது என அவ்வாவணங்கள் குறிப்பிடுகின்றன.(The Ceylon Calendar for the Year of Our* Lord, 1822).

*மட்டக்களப்பு மாவட்டத்தில் வனவளத்துறை குடியிருப்புகளை அமைக்கும் பணிகள் 1914ஆம் ஆண்டு பங்குனி மாதத்தில் தொடங்கப்பட்டன. நிருவாக நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, கூடுதல் கட்டடங்கள் மற்றும் மேம்பாட்டுப் பணிகளுக்காக இத்திட்டத்திற்கு ரூ.4,200.00 செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், இப்பணிகள் நிறைவடைந்தபோது செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூ.2,856.63 மட்டுமே ஆகும்.* (The Ceylon Blue Book, 1914).

*மட்டக்களப்பு வனவள அலுவலகத்தின் புனரமைப்புப் பணிகள் 1920 மாசி மாதம் ஆரம்பிக்கப்பட்டன. இந்தப் பணிகளுக்காக ரூ.290.00 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், உண்மையான செலவு ரூ.168.40ஆகக் குறைவாகவே இருந்துள்ளது.*(The Blue Book, 1920).

*1922ஆம் ஆண்டில், மட்டக்களப்பு பிரிவு வனவள பங்களாவின்* (Divisional Forest Bungalow) *மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூ.3,711.98 செலவிடப்பட்டுள்ளது. அதேகாலகட்டத்தில், வனவளப்*

பாதுகாப்பு அதிகாரியின் (Forest Ranger) குடியிருப்புக்கான சிறப்புப் பழுதுபார்ப்புப் பணிகளுக்காக ரூ.850.00 செலவிடப்பட்டுள்ளது.( The Ceylon Blue Book, 1923).

1924ஆம் ஆண்டில், மட்டக்களப்பு மற்றும் கல்முனை ஆகிய பகுதிகளில் உள்ள வனத்துறை கட்டடங்களின் கட்டுமானங்கள் மற்றும் மேம்பாடுகளுக்காக ரூ.5,000.00 செலவிடப்பட்டுள்ளது. அதேயாண்டில், மூதூர் பகுதியில் உள்ள வனவளப் பாதுகாப்பு அதிகாரி குடியிருப்பின் சிறப்புப் பழுதுபார்ப்புப் பணிகளுக்காக ரூ.850.00 செலவானது எனப் பதிவுகள் காட்டுகின்றன. (The Ceylon Blue Book, 1924). அத்தோடு கோட்டமுனையில் வனவளப்பாதுகாப்பு அலுவலகம் இயங்கியுள்ளது.

**7.5 கலங்கரை விளக்கம்:** பாலமீன்மடுவில் வெளிச்ச வீடு உருவாக்கப்பட்டது. 1913ஆம் ஆண்டு கட்டப்பட்ட இக்கட்டுமானம் 28 மீட்டர் உயரம் கொண்டது, இதன் மூலம் உச்சிக்கு அழைத்துச் செல்லும் குறுகிய படிக்கட்டுகளில் ஏறிச் சென்றால், இது 5 ஜன்னல்கள், விளக்கு மற்றும் காட்சியகத்துடன் கூடிய வட்டமான கற்கோபுரம், வெள்ளை வண்ணம் பூசப்பட்டது.

**7.6 நீதிமன்றக் கட்டுமானங்கள்:** நீதிமன்றக் கட்டுமானங்கள் பழுது பார்க்கப்பட்டமைக்கான செலவுத் தொகையை மேல்வரும் அட்டவணை சுட்டிக் காட்டுகின்றது.

| வேலையின் விளக்கம் | கட்டுமானம் அல்லது பழுதுபார்த்தல் | செலவு(ரூ) | சான்று |
|---|---|---|---|
| மட்டக்களப்பு நீதிபதியின் கட்டடம் | பழுதுபார்த்தல் | 32.00 | இலங்கை நீலப் புத்தகம்-1869 |
| கல்முனையிலுள்ள நீதிமன்ற வளாகம் மற்றும் மஜிஸ்ரேட் பங்களா | பழுதுபார்த்தல் | 18.19 | |
| மாவட்ட நீதிபதியின் வீடு | கொள்வனவு | 8000 | இலங்கை நிருவாக அறிக்கை - 1938 |
| நீதிபதி மஜிஸ்ரேட் பங்களா-கல்முனை | பழுதுபார்த்தல் | 18 பவுண்ட் | |
| நீதிமன்ற கட்டுமான வளாக மதில் புனரமைப்பு | புனரமைப்பு | 14 பவுண்ட் | இலங்கை நீலப் புத்தகம் - 1862 |
| மாவட்ட நீதிபதியின் - எழுதுவினைஞர் அறை | புனரமைப்பு | 210 பவுண்ட் | |

**7.7 நீர்ப்பாசனத்துறை**

1858ஆம் ஆண்டில், கடமையாற்றிய ஆளுநர் ஹென்றி வோர்ட், திரு.பேர்ச் வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில் இறக்காமம் மற்றும் சாகாமம் நீர்ப்பாசனத் திட்டங்களைச் செயற்படுத்த அனுமதி வழங்கினார். சுமார் 18,039 பவுண்ட் செலவில் இந்தத் திட்டங்கள் வெற்றிகரமாகக் கட்டி முடிக்கப்பட்டன. இதற்கு முன்னதாக 1856ஆம் ஆண்டில், அரசாங்க அதிபர் திரு. பேர்ச், பட்டிப்பளை ஆற்றின் கீழ் அமைந்திருந்த நீர்ப்பாசனக் கட்டமைப்புகளின் நிலை

குறித்து ஒரு விரிவான அறிக்கையைச் சமர்ப்பித்திருந்தார். அவ்வறிக்கையில், 1833ஆம் ஆண்டுவரை மிகச்சிறந்த நிலையில் இருந்த அணைக்கட்டுகள், கட்டாய உழைப்பு முறை ஒழிக்கப்பட்டதன் காரணமாகப் பராமரிப்பின்றிச் சிதைவடைந்ததாகக் குறிப்பிட்டிருந்தார். ஒரு சில விவசாயிகள் தற்காலிகப் புனரமைப்புகளைச் செய்தபோதிலும், காலப்போக்கில் இவை முற்றாகச் செயலிழந்து நீரைத் தேக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டன. (கனகரத்தினம், 1921)

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் வாகனேரி மற்றும் உன்னிச்சை ஆகியன பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களாக உருவெடுத்தன. இவை முறையே 13,000 மற்றும் 19,000 ஏக்கர் வயல் நிலங்களுக்கு நீர் வழங்கும் திறன் கொண்டவையாக மதிப்பிடப்பட்டன. எனினும், நீர்ப்பாசனக் கட்டமைப்புகளின் வீழ்ச்சி காரணமாகப் பாரிய அளவிலான விவசாய நிலங்கள் கைவிடப்பட்டிருந்தன. 1867ஆம் ஆண்டு அரசாங்க அதிபர் வெளியிட்ட அறிக்கையின்படி, சுமார் 63,360 ஏக்கர் நெல் விளைநிலங்கள் நீர்ப்பாசன வசதிகள் சீர்குலைந்ததனால் கைவிடப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது.


சமகாலத்தில் நீர்ப்பாசனப் பராமரிப்பில் ஒரு முக்கிய நிருவாக மாற்றம் ஏற்பட்டது. எவ்விதக் கட்டாய உழைப்பையும் மக்களிடமிருந்து பெறக்கூடாது என அரசாங்கம் பகிரங்கமாக அறிவித்தது. எந்தவொரு கிராமத் தலைவராவது அணைக்கட்டுகளைப் பழுதுபார்க்கவோ அல்லது கால்வாய்களைச் சீரமைக்கவோ மக்களைக் கட்டாயப்படுத்தி வேலை வாங்கினால், அவர்கள் உடனடியாகப் பதவியிலிருந்து நீக்கப்படுவார்கள் என எச்சரிக்கப்பட்டது. இத்தகைய சூழலில், பேர்னாட் என்பவர் அம்பாறை குளத்தைப் புனரமைத்ததுடன், இறக்காமத்தில் ஒரு பெரிய அணையையும் கட்டி, ஆற்று நீரை மறித்து நீர்த்தேக்கங்களை நிரப்பவும் வெள்ளத்தைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுத்தார். மேலும் இலங்கை நீலப்புத்தக அறிக்கையில் கூறப்பட்டுள்ள நீர்ப்பாசனத்துறைசார் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேல்வருமாறு அமைகின்றது.

| **நீர்ப்பாசனத்துறை சார்ந்த வேலைகள்** | | |
|---|---|---|
| வேலையின் விளக்கம் | கட்டுமானம் அல்லது பழுதுபார்த்தல் | செலவு (ரூ) |
| உறுகாமக்குளம் மீள்கட்டமைப்பு | கட்டுமானம் | 8736.00 |
| கல்முனையில் மதகு அமைத்தல் | பழுதுபார்த்தல் | 31.18 |
| சாகாமக் குளம் புனரமைப்பு | பழுதுபார்த்தல் | 57.13 |
| கருங்கொடித்தீவுக்குளம் | பழுதுபார்த்தல் | 502.81 |
| மட்டக்களப்பில் நீர்ப்பாசனத் திட்டங்களைப் பராமரித்தல் | பழுதுபார்த்தல் | 250.00 |
| *(The Ceylon Blue Book, 1869, 1920)* | | |

ஹென்றி வோர்டின் ஆட்சிக்காலத்தில் 1856ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க நீர்ப்பாசனக் கட்டளைச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தின் விவசாய வளர்ச்சிக்கு ஒரு புதிய உத்வேகத்தை அளித்தது. இதன் கீழ் பல முக்கிய திட்டங்கள் அதிகசெலவில்

*ஆரம்பிக்கப்பட்டன. உறுகாமம் அணை(ரூ.159,685), புளுக்குணாவ(ரூ.54,342), கடுக்காமுனை(ரூ.33,679), சாகாமம்(ரூ.37,110), திவுலானை(ரூ.43,924) மற்றும் சடையந்தலாவ (ரூ.55,920) ஆகியன இதில் குறிப்பிடத்தக்கவையாகும்.*

*மட்டக்களப்பின் நீர்ப்பாசன வரலாற்றில் 1818ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட காலம் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. குறிப்பாக ஆளுநர் ஹென்றி வோர்ட் நேரடியாக மாகாணத்திற்கு விஜயம் செய்து நீர்ப்பாசன மேம்பாட்டிற்காக நிதி ஒதுக்கீடு செய்தமை ஒரு மகத்தான சேவையாக வரலாற்றில் பதியப்பட்டுள்ளது. 1868ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையின்படி, கிழக்கு மாகாணத்தின் நீர்ப்பாசனப் பணிகளுக்காக மட்டும் 7,438 பவுண்ட் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது, இது அப்பகுதியின் விவசாய மறுமலர்ச்சிக்கு வித்திட்டது. அத்தோடு மேல்வரும் அட்டவணையின் மூலம் 1898ஆம் ஆண்டு அறிக்கையின்படி மட்டக்களப்பில் உள்ள குளங்களைப் பராமரிப்பதற்கான செலவுகளை அறிய முடிகின்றது.*




***7.8***

**வீதிகள் மற்றும் மேம்பாலக் கட்டுமானங்கள்**

*புதிய வீதிகள் அமைப்பது மற்றும் மட்டக்களப்பில் முக்கியமாக சில புதிய வீதிகளை மீண்டும் கட்டியெழுப்புவது தொடர்பான திட்டங்கள் முன்மொழியப்பட்டு மதிப்பிடப்பட்டன. போக்குவரத்தை மிகவும் வசதியாக மாற்றுவதற்காக சில வீதிகள் புதுப்பிக்கப்பட்டு, உயர்த்தப்பட்டு, நீட்டிக்கப்பட வேண்டியிருந்தது. திருகோணமலை-மட்டக்களப்பு வீதியில் 75முதல் 79.25மைல் வரை பராமரிப்பு மற்றும் குறிப்பிட்ட பகுதிக்கு ரூ.5000 மதிப்பிடப்பட்ட தொகை விடுவிக்கப்பட்டது. மட்டக்களப்பு - பதுளை வீதி மற்றும் இலுப்படிச்சேனைக்கு இடையிலான செங்கலடிப் பாதையை அபிவிருத்தி செய்வதற்கு ரூ.8250 செலவு செய்யப்பட்டது.*

*மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறந்த போக்குவரத்து சேவைகளை வழங்குவதற்காக மேலும் ஐந்து கூடுதல் வீதிகளை அமைக்கவும் சில வீதிகளைச் சரிசெய்யவும் மேலும் ரூ.8250 வழங்கப்பட்டது.*(The Ceylon Blue Book, 1925).

*பராமரிப்பு மற்றும் புனரமைப்பிற்காகவும், பதுளை முதல் மட்டக்களப்பு வரையிலான பாதையை 49.5இலிருந்து 93.75 (செங்கலடி எல்லை) வரை நீட்டிக்கவும் ரூ.28,000 செலவிடப்பட்டது. மட்டக்களப்பு-திருகோணமலை வீதியை வெருகல் வரை (கடற்கரை வீதி- வடக்கு) நீட்டிக்க ரூ.37,000 செலவிடப்பட்டது. மகாவலி கங்கை வழியாகச் செல்லும் வாழைச்சேனை-மகாவலி சாலையின் முன்னேற்றத்திற்காக ரூ.18,000 ஒதுக்கப்பட்டது. மட்டக்களப்பு முதல் பானமை (கடற்கரை வீதி-தெற்கு) வரையிலான பாதையை மீட்டமைக்க ரூ.69,000 செலவானது, அக்கரைப்பற்று முதல் சாகாமம் வீதி வரையிலான பாதைக்கு ரூ.8000 மதிப்பிடப்பட்டது. கல்முனை - சடையன்தலாவ வீதியின் மதிப்பிடப்பட்ட செலவு ரூ.5000வாகக் கணிக்கப்பட்டது. காரைதீவு, சம்மாந்துறை மற்றும் இறக்காமம் வீதிகளின் புனரமைப்புக்காக ரூ.8000 செலவிடப்பட்டது. இறுதியாக, மட்டக்களப்பிலிருந்து திருகோணமலை வரையிலான கடற்கரை வீதியாகவும், வெருகல் முதல் கண்டி வீதியாகவும் இருந்த சாலைகளைப் பராமரிப்பதற்காக ரூ.26,600 செலவிடப்பட்டது.*( The Ceylon Blue Book , 1938).

*1924ஆம் ஆண்டில், கிழக்கு மாகாணத்தில் மேல்வரும் வீதிகள் பழுது மற்றும் பராமரிப்பு செய்யப்பட்டன. கடற்கரை வீதி வடக்கு, மட்டக்களப்பு (ரூ.39,525), மாதுரு-ஓயா முதல் ஏறாவூர் வரை (ரூ.68,300), கல்குடா வீதி (ரூ.2,700), பன்குடாவெளி வீதி (ரூ.2,700), ஓய்வு விடுதி வரையிலான வீதிகள். (ரூ.3,000), கல்குடா-வாழைச்சேனை வீதி (ரூ.1,980), அக்கரைப்பற்று-சாகாமம் வீதி (ரூ.6,300), அரசடி முதல் மாகம்புட்டி (ரூ.1,876.50), அக்கரைப்பற்று முதல் இறக்காமம் வீதி (ரூ.216), கரையோர வீதி(ரூ. 60), சம்மாந்துறை மற்றும் இறக்காமம் (ரூ.7,045), கல்முனை-சடயந்தலாவ வீதி (ரூ.4,072.50), பொத்துவில்-மாப்பேன் வீதி(ரூ.1,370), கல்முனை கடற்கரையோர வீதி(ரூ.378), பொது கட்டடங்களுக்கான வீதிகள் (ரூ.166.50), காத்தான்குடி வீதிகள்(ரூ.4,500) போன்றவற்றைக் குறிப்பிடலாம்.*(The Ceylon Blue Book, 1924).

*1924ஆம் ஆண்டில், கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தினால் ஏற்பட்ட படகுப் போக்குவரத்துச் சேதங்களைப் பராமரித்தல் மற்றும் சரிசெய்தல் ஆகியவற்றுக்கு மேல்வரும் செலவுகள் ஏற்பட்டன. மட்டக்களப்பு நீர் வழங்கல் திட்டப் பராமரிப்பு (ரூ.6,150.00), கல்முனை மாவட்டத்தில் ஆறுகளின் மணல் திட்டுகளை வெட்டுதல் (ரூ.300), மட்டக்களப்பு டச்சுப் முகத்துவாரத்தை திறத்தல்(ரூ.143.00), கிழக்கு மாகாணத்தில் படகுகளைப் பழுதுபார்த்தல்(ரூ.4,350.00), மட்டக்களப்பு மற்றும் கல்முனை மாவட்டங்களில் வெள்ள சேதங்கள்(ரூ.725.00), வாழைச்சேனை படகுப் போக்குவரத்துச்சேவை வரையிலான வீதிகளைப் புனரமைப்புச் செய்தல்(ரூ.900.00), கல்லடி படகு வீதிகளைப் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்(ரூ.90.00).* (The Ceylon Blue Book, 1924). *கிழக்கு*

*மாகாணத்தில் படகுப் போக்குவரத்துச் செலவு ரூ.9,500.00 மற்றும் மட்டக்களப்பு நீர் வழங்கல் திட்டப் பராமரிப்புச் செலவாக ரூ.7,700.00 காணப்பட்டது.* (The Ceylon Blue Book, 1931).

*பாலங்கள்: காரைதீவுக்கும் சம்மாந்துறைக்கும் இடையிலான பாலத்தின் கட்டுமானத்திற்காக ரூ.7000 செலவு செய்யப்பட்டது. சேதமடைந்த தண்டவாள தாங்கு உருளைகளை அகற்றி அந்தப் பாலத்தை மேம்படுத்த ரூ.29,000 செலவானது. (The Ceylon Blue Book, 1938). கிழக்கு மாகாணத்தில் தற்போதுள்ள இரும்பு மற்றும் மரப்பாலங்களைப் பராமரிப்பதற்காக ரூ.11,500 ஒதுக்கப்பட்டது. (நிருவாக அறிக்கை, 1938). 5ஆவது பாலத்தின் கீழ் மட்டக்களப்பு மற்றும் கல்முனையில் உள்ள அனைத்து பாலங்களின் பராமரிப்பு, பழுதுபார்ப்பு மற்றும் புதுப்பித்தலுக்கான மொத்த செலவு ரூ.41,000 மற்றும் கல்முனையில் புதுப்பிக்க ரூ.16,000 ஒதுக்கப்பட்டது.*( The Ceylon Annual Report, 1892).

*வெருகலில் 75ஆவது மற்றும் 78வது மைல்களுக்கு இடையில் கண்டி வீதியில் உள்ள இரண்டு மரப் பாலங்களை மாற்றுவதற்கும், வேறு இரண்டு பாலங்களை மேம்படுத்துவதற்கும் ரூ.25,000 ஒதுக்கப்பட்டது.* (The Ceylon Blue Book, 1928). *மட்டக்களப்பை மற்ற தொலைதூர இடங்களுடன் இணைத்த சில பாலங்களின் கட்டுமானம், மேம்பாடு மற்றும் பழுதுபார்ப்பு பற்றிய ஆராய்கின்றபோது மட்டக்களப்பில் உள்ள புளியந்தீவு பாலத்தின் புதுப்பித்தல் மற்றும் மேம்பாட்டிற்காக ரூ.86,500 மதிப்பிடப்பட்ட செலவு ஒதுக்கப்பட்டது. பதுளையிலிருந்து மட்டக்களப்பு வீதியில் 69ஆவது மைலில் உள்ள 198ஆவது மைல் பாலத்திற்கு ரூ.9300 ஒதுக்கப்பட்டது.*( The Ceylon Blue Book, 1929)

*கிழக்கு மாகாணத்தில் பாலங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புக்கு ரூ.9,000.00 செலவாகும். மட்டக்களப்பில் உள்ள வடக்கு கடற்கரை சாலையில் உள்ள பாலம் எண்.36ஐ பழுதுபார்க்க ரூ.2,000.00 செலவாகும் என மதிப்பிடப்பட்டது.*( The Ceylon Blue Book, 1924). *கிழக்கு மாகாணத்தில் உள்ள பிரதான சாலைகளில் இரும்பு மற்றும் மரப் பாலங்களின் பராமரிப்பு செலவாக ரூ.13,000.00 மதிப்பிடப்பட்டுள்ளது.*( The Ceylon Blue Book, 1931).

*மட்டக்களப்பில் உள்ள புளியந்தீவு பாலக் கட்டுமானச் செலவாக ரூ.86,500 மதிப்பிடப்பட்டது. ஓந்தாச்சிமடம் பாலப் பாதையின் புதுப்பித்தல் மற்றும் மேம்பாட்டிற்கு ரூ.15,500 செலவாகும் என மதிப்பிடப்பட்டது. பதுளையிலிருந்து மட்டக்களப்பு செல்லும் சாலையில் 69வது மைலில் உள்ள 148வது பாலப் பாதைகளுக்கு ரூ.9300 ஒதுக்கப்பட்டுள்ளது.*( The Ceylon Blue Book, 1930).

*1934ஆம் ஆண்டு சித்திரை மாதம் ஓந்தாச்சிமடம் பாலம் கட்டும் பணி தொடங்கியது. 18வது மைல் தெற்கு கடற்கரை சாலைக்கு ரூ.6000 நிதி ஒதுக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து மட்டக்களப்பு*

*மாவட்டத்தில் உள்ள மற்ற மூன்று பாலங்களின் மறுசீரமைப்புக்கு ரூ.3500 செலவிடப்பட்டது.* (The Ceylon Blue Book, 1934).

*பிரித்தானிய நிருவாகத்தின்போது கிழக்கு மாகாணத்தில் வீதிகள் மற்றும் பாலங்கள் மேம்பாட்டினால் ஏற்பட்ட சமூக தாக்கம், வீதி உட்கட்டமைப்பின் விரிவாக்கம் கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு இடையில் மக்கள், பொருட்கள் மற்றும் சேவைகளை எளிதாக நகர்த்த அனுமதித்தது. இது இயக்கம், இணைப்பு மற்றும் பொருளாதார ஒருங்கிணைப்பை மேம்படுத்தியது, இதனால் வர்த்தகம், வணிகம் மற்றும் சந்தைகளுக்கான அணுகலை அதிகரித்தது. வீதிகள் மற்றும் பாலங்கள் நகரங்களின் வளர்ச்சிக்கும் சமூக சேவைகளுக்கான சிறந்த அணுகலுக்கும் வழிவகுத்திருந்தாலும், இது கிழக்கு மாகாணத்தின் சில கிராமப்புற சமூகங்களின் இடம்பெயர்வு மற்றும் நன்மைகளுக்கான சமமற்ற அணுகலுக்கும், சமூக படிநிலைகளை வலுப்படுத்துவதற்கும்; இயற்கை வளங்கள் மற்றும் மனித ஊதியங்களை சுரண்டுவதற்கும் வழிவகுத்தது.*

***புகையிரத சேவை:*** *மட்டக்களப்பு - மஹோ மற்றும் திருகோணமலை இலகுரக புகையிரதப் பாதைக்காக 1921ஆம் ஆண்டின் 6ஆம் கட்டளைச் சட்டத்தின் கீழ் கடனாக மாற்றக்கூடிய பணிகள் தொடர்பான செலவீன அறிக்கை, புரட்டாதி மாதம் 30, 1922 வரையிலான செலவீனத் தொகையாக ரூ.10,638,062.66 மதிப்பிடப்பட்டுள்ளது, அதே நேரத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொகை ரூ.13,874,400ஆக மதிப்பிடப்பட்டது. மேலும், இந்தக் காலகட்டத்தில், திரு. டபிள்யூ.டபிள்யூ.வுட் காலனித்துவப் பொருளாளராகப் பணியாற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.* (The Ceylon Blue Book, 1922).

*புகையிரதமானது கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து பயணத்தைத் தொடங்கி மட்டக்களப்பு நிலையத்தை அடைந்தது. மட்டக்களப்பு நிலையத்தை அடையக் கடக்க வேண்டிய துணைப் புகையிரத நிலையங்களாக மன்னம்பிட்டி, புனானை, வாழைச்சேனை, கல்குடா, வந்தாறுமூலை, ஏறாவூர் மற்றும் மட்டக்களப்பு போன்றனவாகும்.*

*1928ஆம் ஆண்டில், ஆங்கில நீலப்புத்தக அறிக்கையின்படி, மட்டக்களப்புப் புகையிரத நிலையத்திற்குச் செல்லும் பிரதான சாலைகளை அகலப்படுத்தவும் மேம்படுத்தவும் சுமார் ரூ.23,000 தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டது. இந்தப் பணி மார்கழி மாதம் 1927இல் தொடங்கியது. மட்டக்களப்புப் புகையிரத நிலையத்திற்கான சாலைகளை அகலப்படுத்தவும் மேம்படுத்தவும் ரூ.10,000 செலவாகும் என்று மதிப்பிடப்பட்டது.*

*மதகுகள் மற்றும் தடுப்புச் சுவர்கள், மாதுரு-ஓயா முதல் ஏறாவூர் வீதிகள் வரை, அகலப்படுத்தல் மற்றும் பதுளை முதல் மட்டக்களப்பு வீதிகள் ஆகியவற்றின் முகப்புச் சுவர்களுக்கு ரூ.8000 செலவாகும் என மதிப்பிடப்பட்டது. மட்டக்களப்பு, ஏறாவூர் மற்றும் வாழைச்சேனை ஆகிய*

புகையிரத நிலையங்களுக்குச் செல்லும் வீதிகளை மேம்படுத்துவதற்கு ரூ.5900 செலவாகும் என மதிப்பிடப்பட்டது. (The Ceylon Blue Book, 1929).

புகையிரத டப்லெட் அமைப்பு (The Railway Tablet System) ஆங்கிலேயர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த அமைப்பின் நோக்கம், ஒற்றை வழிப் பிரிவில் தங்கள் புகையிரத பிரத்தியேக உரிமையைக் கொண்டுள்ளது என்பதற்கான இயற்பியல் உத்தரவாதமாக டப்லெட்டைப் பயன்படுத்துவதாகும். இது இல்லாமல், ஒற்றைப் பாதைக்கான நுழைவைப் பாதுகாக்கும் பிரிவு சமிக்ஞையைத் தாண்டி அவர்களால் செல்ல முடியாது. இந்த அமைப்பு ஒற்றை நெம்புகோல் கொண்டு குறிப்பிட்ட பகுதியை மின்சாரம் மூலம் பூட்டியது. இது சிவப்பு பின்னணியில் ஒரு வெள்ளை பட்டையால் குறிக்கப்பட்டது. மஹோ சந்திப்பிலிருந்து மட்டக்களப்பு புகையிரத நிலையம் வரை பேரூந்துகள் செயற்பாட்டில் இருந்தன. மஹோ சந்திப்பு இந்த சேவைக்கான முனையப் புள்ளியாகச் செயற்பட்டது.

மேலும் வெவ்வேறு காலங்களில் காலனித்துவ அறிக்கைகளை ஆராய்கின்றபோது 1869ஆம் ஆண்டில் பொதுநிருவாக வேலைக் கட்டுமானப் புனரமைப்பிற்கென ரூ.15.00 செலவிடப்பட்டது.(The Ceylon Blue Book, 1869), அத்தோடு 1938ஆம் ஆண்டு பொதுநிருவாக வேலைக் கட்டுமானப் புனரமைப்பிற்கென ரூ.14813.00 செலவிடப்பட்டது. (The Ceylon Administration Report, 1938).

எனவே, வீதி வலையமைப்புக்களில் இந்த முன்னேற்றங்கள் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதிலும் குடியிருப்பாளர்களின் வாழ்க்கைத் தரத்தை கணிசமாக மேம்படுத்துவதிலும் முக்கியபங்கு வகிக்கின்றது. காலனித்துவ கால உட்கட்டமைப்பு நவீன வளர்ச்சிக்கு ஒரு அடித்தளத்தை நிறுவியது, பிராந்தியத்தின் சமூக-பொருளாதார நிலப்பரப்பை வடிவமைத்து அதன் குடிமக்களின் அன்றாட வாழ்க்கைக்கு பயனளித்தமை குறிப்பிடத்தக்கது.

**7.9 தபாற்சேவை**

அஞ்சல் சேவையின் முக்கிய நோக்கமாக அமைவது இராணுவ சேவைகள், பணம் அல்லது சேமிப்பு வங்கி, நிருவாகப் பணிகள் மற்றும் கிழக்கு மாகாணத்தின் பூர்வீக மக்களின் தகவல் தொடர்பாடலை எளிதாக அணுகுவதற்கு வழிவகுத்தது. குறிப்பாக பிரித்தானிய நிருவாகத்தின் 1910 முதல் 1911 வரையிலான காலப்பகுதியில் இரண்டு புதிய தபால் நிலையங்களும் முப்பது உப அலுவலகங்களும் திறக்கப்பட்டன. மொத்த அலுவலகங்களின் எண்ணிக்கை 444 ஆகும், அவற்றில் 276 அஞ்சல் முத்திரைகள் விற்பனை மற்றும் கடிதங்களை இடுகையிடுதல் மற்றும் விநியோகிப்பதற்கான அலுவலகங்களாகும், அதேநேரத்தில் 168 பணப்பரிமாற்றம் மற்றும் சேமிப்பு வங்கி அலுவலகங்களாகும். அத்தோடு 110 தந்தி அலுவலகங்களும் இருந்தன. (Colonial Reports-Annual Ceylon Report, 1910, 1912). குறிப்பாக மட்டக்களப்பில் கல்குடா,

தாமரைக்குளம், புளியந்தீவு, காத்தான்குடி, கோரகல்லிமடு, வாழைச்சேனை போன்ற இடங்களில் தந்தி அலுவலகங்கள் இயங்கின. (Map of the Villages in the Eastern Province, 1926).

### 7.10 ஏனைய கட்டுமானங்கள்

**உப்பு களஞ்சிய அறைகள்:** புளியந்தீவிலுள்ள உப்பு களஞ்சிய அறை பழுதுபார்த்தலுக்கு ரூ.6.00 அதேபோன்று கருங்கொடித் தீவிலுள்ள உப்பு களஞ்சிய அறை பழுதுபார்த்தலுக்கு ரூ.14.00 செலவிடப்பட்டது. (The Ceylon Blue Book, 1869). 1827ஆம் ஆண்டில், மட்டக்களப்பில் நெற் களஞ்சியசாலைகள் கட்டப்பட்டன. அக்காலப்பகுதியில் மட்டக்களப்பின் புளியந்தீவு பகுதியில் 20,000 புசல் நெல் சேமித்து வைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (History of the Public Works Department Ceylon, 1918).

## 8. கட்டுமானங்களால் ஏற்பட்ட சமூக, பொருளாதார மாற்றங்கள்

பிரித்தானியரின் நிருவாகக் கட்டுமானங்களான நீதிமன்றங்கள், தபால் நிலையங்கள் மற்றும் நிருவாகக் கட்டடங்கள், பிரித்தானியர் காலத்தில் சமகால சமூகத்தில் ஒரு முறையான அதிகாரக் கட்டமைப்பை உருவாக்கின. குறிப்பாக, 'கட்டாய உழைப்பு முறை' (Compulsory Labour System) ஒழிக்கப்பட்டதும், அதற்குப் பதிலாக ஊதியம் வழங்கும் முறை மற்றும் சட்டரீதியான நிருவாக முறைகள் அமுல்படுத்தப்பட்டதும் சமூகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. இது நிலப்பிரபுத்துவ அமைப்பிலிருந்து மக்களை விடுவித்து, அரசாங்கத்தின் நேரடி நிருவாகத்தின் கீழ் கொண்டு வந்தது. இதன் மூலம் சமூக நீதியும், தனிமனித சுதந்திரமும் ஒரு புதிய பரிமாணத்தைப் பெற்றன.

மருத்துவமனைகள், டிஸ்பென்சரிகள் மற்றும் பாடசாலைக் கட்டுமானங்கள், வழிபாட்டிடங்கள் மட்டக்களப்பு மக்களின் சமூக வாழ்வில் அடிப்படை மாற்றங்களைக் கொண்டு வந்தன. நவீன மருத்துவ வசதிகள் மக்களைச் சென்றடைந்ததால் தொற்றுநோய்க் காலங்களில் உயிரிழப்புகள் குறைக்கப்பட்டு மக்கள் தொகை சீராக வளர வழிவகுத்தது. அதேபோல், பாடசாலைக் கட்டுமானங்கள் மூலம் ஆங்கிலக் கல்வியும் நவீன அறிவுப் பகிர்வும் சமூகத்தின் ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்குக் கிடைத்தது. இது மட்டக்களப்பில் ஒரு புதிய படித்த மத்தியதர வர்க்கம் உருவாவதற்கு வித்திட்டதுடன், அவர்கள் பின்னாளில் சமூகத் தலைமைத்துவத்தை ஏற்கும் சூழலையும் உருவாக்கியது.

பிரித்தானியர் கால நீர்ப்பாசனக் கட்டுமானங்கள் மட்டக்களப்பின் விவசாயப் பொருளாதாரத்தில் ஒரு பாரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தின. 1856ஆம் ஆண்டின் நீர்ப்பாசனக் கட்டளைச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட உறுகாமம், இறக்காமம், சாகாமம் போன்ற குளங்கள் மற்றும் அணைக்கட்டுத் திட்டங்கள் கைவிடப்பட்டிருந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை மீண்டும் விளைநிலங்களாக மாற்றின. இதன் மூலம் நெல் உற்பத்தி அதிகரித்ததுடன் அதுவரை காலமும் வாழ்வாதார விவசாயமாகவிருந்த நிலைமாறி, சந்தைக்கான உற்பத்தியாகப் பொருளாதார ரீதியில்

*முன்னேற்றம் கண்டது. மேலும், வீதிகள் மற்றும் பாலங்களின் இணைப்பு, விளைபொருட்களை ஏனைய பிராந்தியங்களுக்குக் கொண்டு செல்வதை எளிதாக்கி வர்த்தகப் போக்குவரத்தை விரிவுபடுத்தியது. அத்தோடு தபாற்சேவை உரிய இடங்களுக்குச் செய்திகளை வழங்கியதோடு சேமிப்பு மையங்களாகவும் விளங்கின. வன வளத்திணைக்களம், நீர்ப்பாசனம், தெங்கு உற்பத்தி போன்ற பொருளாதார உற்பத்திப் பெருக்கத்திற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் அவற்றுடன் இணைந்து உருவாக்கப்பட்ட கட்டுமானங்கள் அவர்களது செயற்பாடுகளைத் துரிதப்படுத்தியது. அத்தோடு நெற்களஞ்சிய சாலை, உப்புக் களஞ்சிய சாலைகளின் உருவாக்கம் உரிய சந்தைப்படுத்தலுக்கு வழிவகுத்தது.*

*கலங்கரை விளக்கம் மற்றும் ஏனைய பொதுக் கட்டுமானங்களில் பயன்படுத்தப்பட்ட நியோகிளாசிக்கல் மற்றும் விக்டோரியன் கட்டடக்கலைப் பாணிகள், மட்டக்களப்பின் நகரக் கலாச்சாரத்தில் ஒரு நவீன மாற்றத்தைக் கொண்டு வந்தன. உயரமான கூரைகள், வளைவு வாயில்கள் போன்ற ஐரோப்பிய நுட்பங்கள் உள்ளூர் கட்டடக்கலை வளர்ச்சியிலும் செல்வாக்குச் செலுத்தின. இக்கட்டுமானங்கள் மட்டக்களப்பை ஒரு முக்கிய நிருவாக மற்றும் வர்த்தக மையமாக மாற்றியதுடன், அப்பகுதியின் வரலாற்றுப் பாரம்பரியத்தின் பிரிக்க முடியாத அங்கங்களாகத் திகழ்கின்றன.*

## *9. முடிவுரை*

*எனவே தொகுத்து நோக்குகின்றபோது மட்டக்களப்புப் பிராந்தியத்தில் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கட்டுமானங்கள் வெறும் செங்கல் மற்றும் சாந்து கலந்த கட்டடங்கள் மட்டுமல்ல. அவை அப்பகுதியின் நவீன வரலாற்று மாற்றத்தின் அத்திவாரங்களாகும். காலனித்துவகால நிருவாக அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வின் மூலம், பிரித்தானியரின் கட்டடக்கலைப் பாணிகள் மற்றும் அவர்களின் நிருவாகத் தேவைகள் எவ்வாறு ஒரு நிலப்பரப்பின் முகவரியையே மாற்றியமைத்தன என்பதை அறியமுடிகிறது.*

*நீர்ப்பாசனக் கட்டுமானங்கள் மட்டக்களப்பின் விவசாயப் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்பின. சிதைவடைந்திருந்த குளங்களைப் புனரமைத்ததன் மூலம், கைவிடப்பட்ட பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் மீண்டும் பயிர்செய்கைக்குரிய நிலங்களாக மாறின. இது இப்பிராந்தியத்தின் தன்னிறைவுப் பொருளாதாரத்திற்கு வலுசேர்த்தது. மேலும் காலனித்துவ காலத்தில் போக்குவரத்து வீதிகள், படகுகள், பாலங்கள் மற்றும் புகையிரதப் பாதைகளின் வளர்ச்சியானது கிழக்கு மாகாணத்தில் வர்த்தகத் துறையை, குறிப்பாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதியைப் பொருளாதாரத்தை கணிசமாக மேம்படுத்தியது. இந்த உட்கட்டமைப்பு மேம்பாடுகள் போக்குவரத்தை எளிதாக்கி தாமதங்களைக் குறைத்தது. மற்றும் அஞ்சல், தகவல் தொடர்பு சேவைகள் மூலம் செய்தி பரிமாற்றத்தைத் துரிதப்படுத்தியது.*

*போக்குவரத்து வலையமைப்பு வளர்ச்சியில் பிரித்தானிய காலனித்துவ செல்வாக்கு கிழக்கு மாகாண மக்களின் வாழ்க்கை முறைகளில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து உட்கட்டமைப்பு வர்த்தகத்தை மட்டுமல்ல, சுகாதாரம் மற்றும்*

*கல்வி போன்ற அத்தியாவசிய சேவைகளை மக்கள் எளிதாக அணுக உதவியது. முன்னர் தனிமைப்படுத்தப்பட்ட சமூகங்களை இணைப்பதன் மூலம், இது சமூக தொடர்புகள் மற்றும் கலாச்சார பரிமாற்றங்களை ஊக்குவித்தது.*

*சமூக ரீதியாகப் பார்க்கும்போது, நீதிமன்றங்கள் மற்றும் நிருவாக அலுவலகங்களின் உருவாக்கம், ஒரு முறையான சட்டமுறையை மக்களுக்கு அறிமுகப்படுத்தியது. 'கட்டாய உழைப்பு முறை' ஒழிப்பு மற்றும் நவீன கல்வி, சுகாதார நிலையங்களின் உருவாக்கம் என்பன மக்களின் வாழ்க்கைத் தரத்தில் பாரிய முன்னேற்றத்தை ஏற்படுத்தின. குறிப்பாக, இக்காலப்பகுதியில் அறிமுகமான ஐரோப்பிய கட்டடக்கலை நுட்பங்கள், சுதேச கட்டடக்கலையிலும் ஒரு புதிய தாக்கத்தை ஏற்படுத்தியதோடு, மட்டக்களப்பை ஒரு முக்கிய நிருவாக மையமாக நிலைநிறுத்தியது.*

*பிரித்தானியர் காலக் கட்டுமானங்களில் பெரும்பாலானவை யுத்தத்தினாலும் வேறு இதர காரணங்களினாலும் முழுமையாகச் சேதமடைந்துள்ளன. இருப்பினும் எஞ்சிய கட்டுமானங்கள் மட்டக்களப்பின் பாரம்பரிய விழுமியங்களுடன் ஐரோப்பிய நவீனத்துவத்தை இணைக்கும் ஒரு பாலமாகத் திகழ்கின்றன. நூறு ஆண்டுகளைக் கடந்தும் இன்றும் உறுதியுடன் நிமிர்ந்து நிற்கும் சில கட்டுமானங்கள், தொல்லியற் தடயங்கள், முறையான ஆவணப்படுத்தல் மற்றும் பாதுகாப்பின் மூலம் எதிர்காலச் சந்ததியினருக்கு எமது வரலாற்றைக் கொண்டு செல்லும் முக்கிய சான்றுகளாக அமையும் என்பதில் ஐயமில்லை.*

***உசாத்துணை***


- **Colonial Records: British Period**
  - The Ceylon Calendar for the Year of Our Lord(1822).Government Printers, Ceylon
  - The Ceylon Almanac and Annual Register (1834). Government Printers, Ceylon.
  - The Ceylon Blue Book(1869). Government Printers, Ceylon.
  - The Ceylon Blue Book(1914). Government Printers, Ceylon.
  - The Ceylon Blue Book(1920). Government Printers, Ceylon.
  - The Ceylon Blue Book(1922). Government Printers, Ceylon.
  - The Ceylon Blue Book(1923). Government Printers, Ceylon.
  - The Ceylon Blue Book(1924). Government Printers, Ceylon.
  - The Ceylon Blue Book(1925). Government Printers, Ceylon.
  - The Ceylon Blue Book(1928). Government Printers, Ceylon.
  - The Ceylon Blue Book(1929). Government Printers, Ceylon.
  - The Ceylon Blue Book(1930). Government Printers, Ceylon.
  - The Ceylon Blue Book(1931). Government Printers, Ceylon.
  - The Ceylon Blue Book(1934). Government Printers, Ceylon.
  - The Ceylon Blue Book(1938). Government Printers, Ceylon.
  - Ceylon Administration Report (1878). Government Printers, Ceylon
  - Ceylon Administration Report (1892). Government Printers, Ceylon

- Ceylon Administration Report (1898). Government Printers, Ceylon
- Ceylon Administration Report (1933). Government Printers, Ceylon
- Ceylon Administration Report (1938). Government Printers, Ceylon
- Map of the Villages in the Eastern Province (1926). Survey Department.
- The Ceylon Annual Report (1892). Government Printers, Ceylon.
- The Ceylon Annual Report (1910). Government Printers, Ceylon.
- The Ceylon Annual Report (1912). Government Printers, Ceylon.
- History of the Public Works Department, 1796 to 1913 (1914). Government Printers, Ceylon.

**Secondary Sources:**

- *கோபாலசிங்கம். சீ, (2011). மட்டக்களப்பு வரலாறு ஒரு அறிமுகம். ஆதவன் அச்சகம்;.*
- *கோபாலசிங்கம், சீ. (2016). மட்டக்களப்புத் தேசம்: வரலாறும் வழக்காறும். சேமமடு பதிப்பகம்.*
- Canagaratnam, S.O.(1921). Monograph of the Batticaloa district of the Eastern Province. Government Printers, Ceylon.
- Perniola, V.(2006). The Catholic Church in Sri Lanka, Vol – X, 1893-1923, Tisara Prakasakayo Ltd.
- Jawaharlal Nehru (1934).Glimpses of World History, Kitabistan Publisher
- Metcalf, Thomas.R,(1989). *An Imperial Vision: Indian Architecture and Britain's Raj*. University of California Press,
- Woodeson.A, (1930). Mantivu Leper Asylum, Batticaloa, The Engineering Association of Ceylon
- Ismeth Raheem and Percy Colin-Thome (2000).Images of British Ceylon: Nineteenth Century Photography of Sri Lanka,Times Editions-Marshall Cavendish